**தலைப்பு 202 – முஸ்லிம் சமய பண்பாட்டு அலுவல்கள் திணைக்களம் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை - 2017 ஆம் ஆண்டு**

2017 இன் 32 ஆம் இலக்க ஒதுக்கீட்டு (திருத்த) சட்டத்தினால் திருத்தப்பட்ட 2016 இன் 24 ஆம் இலக்க ஒதுக்கீட்டுச் சட்டத்தின் முதலாவது அட்டவணையிலும் இரண்டாவது அட்டவணையிலும் குறிப்பிடப்பட்ட தலைப்புக்கள் மற்றும் விடய இலக்கம் என்பவற்றின் கீழ்வரும் ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றுக்கள் முஸ்லிம் சமய பண்பாட்டு அலுவல்கள் திணைக்களத்தினால் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டன. அக் கணக்குகளிலிருந்தும் இணக்கக் கூற்றுக்கள் நிரூபணமாகும் நிதி மற்றும் பௌதீக செயலாற்றல் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன.

**1.2 பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் நிதி முகாமைத்துவம் மற்றும் கணக்குகள் தொடர்பான பொறுப்பு**

இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு நிதிப் பிரமாணக் கோவையின் நிதிப்பிரமாணம் 124 பிரமாணத்தின் பிரகாரம் அரசின் பண உழைப்பு மற்றும் அரசிற்கு கிடைக்க வேண்டிய பணத்தை சேகரித்தல் உட்பட அரசின் சகல நிதி நடவடிக்கைகளையும் மேற்பார்வை தொடர்பாக பொது அதிகாரம் நிதி அமைச்சருக்கு கையளிக்கப்பட்டுள்ளது. நிதி அமைச்சரால் அப்பொறுப்புக்களை நிறைவேற்றும் பொருட்டு நிதிப்பிரமாணம் 124(2) இன் பிரகாரம் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். நிதிப்பிரமாணம் 125(1)(அ) பிரகாரம் திணைக்களத் தலைவர் தனது திணைக்களத்தின் சகல பணக்கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தராக இருப்பதுடன் வருமானக் கணக்கீட்டு உத்தியோகத்தர் திறைசேரியால் நியமிக்கப்பட்டுள்ளார். பாராளுமன்றத்தில் விதிக்கப்படும் வரையரைகளுக்குள்ளே தமது கடமைகளை நிறைவேற்றி சமர்ப்பிக்கப்படுகின்ற கணக்குகள் மற்றும் இணக்கக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 ஆம் உறுப்புரைகள், ஏனைய நியதிச்சட்ட ஏற்பாடுகள், அரசாங்க நிதி மற்றும் நிர்வாகப் பிரமாணங்களுக்கு இணங்க பேணுதல், தயாரித்தல் மற்றும் நியாயபூர்வமானதாக சமர்ப்பிப்பதற்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளைத் திட்டமிடல், செயற்படுத்தல் மற்றும் பேணுதல் என்பன இப்பொறுப்பில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

**1.3 கணக்காய்வு விடயப் பரப்பு**

தலைப்பு 202 – முஸ்லிம் சமய பண்பாட்டு அலுவல்கள் திணைக்களத்தின் 2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி மற்றும் பௌதீக செயலாற்றல் தொடர்பாக திட்டமிடல், அரச செலவினங்கள், அரச வருமானங்கள், மனித மற்றும் பௌதீக வள முகாமைத்துவம், உள்ளக கட்டுப்பாட்டு ஏற்பாடுகளைப் பயன்படுத்துதல், சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுக்கு இணங்குதல் மற்றும் புத்தகங்கள், பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் இணக்கக் கூற்றுக்களை நாளதுவரையாக பேணுதல், கணக்குகளைத் தயாரித்து உரிய காலப்பகுதியில் சமர்ப்பித்தல், செயலாற்றல் குறிகாட்டிகளை அடிப்படையாகக் கொண்டு தரப்பினருக்கு இடையே செயலாற்றல் அறிக்கைகளை விநியோகித்தல் தொடர்பாக இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் கணக்காய்வு செய்யப்பட்டன. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2018 யூலை 04 ஆந் திகதி திணைக்களத்தின் தலைவருக்கு வழங்கப்பட்டது. கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள், கருத்துரைகள் மற்றும் கண்டுபிடிப்புக்கள் என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட திட்டங்கள், கணக்குகள், இணக்கக் கூற்றுக்கள் மற்றும் செயலாற்றல் தொடர்பான மீளாய்வு, கொடுக்கல் வாங்கல்கள் மாதிரிகளது போதியளவான செவ்வை பார்த்தல்கள் என்பவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அவ்வாறான மீளாய்வினதும், செவ்வை பார்த்தலினதும் நோக்கெல்லையும் பரப்பும் என்னால் பெற்றுக்கொள்ளக் கூடியதாகவிருந்த பதவியணியினர், ஏனைய வளங்கள், காலம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வு ஒன்றினை மேற்கொள்ளக்கூடிய முறையில் தயாரிக்கப்பட்டதாகும்.

## 1.4 கணக்காய்வு அவதானிப்புக்கள்

2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான முஸ்லிம் சமய பண்பாட்டு அலுவல்கள் திணைக்களத்தில் மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வின் போது வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அவதானிப்புகளிலிருந்து பொருண்மையான மற்றும் முக்கியத்துவமான கணக்காய்வு அவதானிப்புகள் இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தி முதல் 2.7 வரையான பந்திகளில் குறிப்பிடப்பட்டுள்ளன. நிதி நிர்வாகத்தின் போதுமானதன்மை உறுதிப்படுத்தப்படும் வகையில் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு நிதிப் பிரமாணக் கோவையின் நிதிப்பிரமாணம் 128 இல் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளை நிறைவேற்றும் போது கண்டறியப்பட்ட பின்வரும் குறிப்பில் பொழிப்பாக்கப்பட்டு காண்பிக்கப்பட்டுள்ள கணக்காய்வு அவதானிப்புக்களுக்கு உட்படத் கணக்கீட்டு உத்தியோகத்தராக தமது கணக்களிதன்மையை திருப்திகரமாக நிறைவேற்றியுள்ளதாக அவதானிக்கப்பட்டது.

| நிதிப்பிரமாணம் | நிதிப்பிரமாணம் 128 இன் பிரகாரம், பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கணக்களிதன்மை | கணக்கீட்டு உத்தியோகத்தரினாலும் அந்த ஏற்பாடுகளுடன் இணங்காதிருந்தமை | அவதானிப்புக்கள் உள்ளடக்கப்பட்ட அறிக்கையின் பந்தியுடனான தொடர்பு |
|---|---|---|---|
| 128(1)(அ) | அரசினால் நிர்ணயிக்கப்பட்டு குறிப்பிடப்பட்டுள்ள கொள்கை மற்றும் அதிகாரம் வழங்கப்படும் நடவடிக்கைகளுக்காக நிதி ஏற்பாடு செய்து கொடுப்பதில் பாராளுமன்றத்தின் சவால்களை கவனத்திற் கொண்டு தமது திணைக்களத்தின் நடவடிக்கைகள் வெளிப்படை தன்மையுடன் திட்டமிடப்பட்டு செயற்படுத்து வதாகவும் நடப்பாண்டிற்காக ஆண்டிற்காக நிர்ணயிக்கப்பட்ட நிகழ்ச்சித்திட்டங்களைப் பூர்த்தி செய்வதற்கும் அல்லது நிர்ணயிக்கப்பட்ட இலக்கை நிறைவேற்றுவதற்கு முயற்சி எடுக்கப்பட்டிருந்தமை | திணைக்களத்தின் கீழ் காணப்பட்ட நிதியங் களுக்காக செயல் நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | 2.1.1 |
| | | மிகை ஒதுக்கீடு மேற்கொள்ளப்பட்டிருந்தமை | 2.5 |
| 128(1)(ஆ) | தமது திணைக்களத்தின் நிதிக் கட்டுப்பாட்டிற்கும் கணக்கீட்டு முறைக்குமுள்ள ஒழுங்குகள் வெற்றிகரமாகவும் தேவையான சந்தர்ப்பங்களில் அரசிற்கு கிடைக்க வேண்டிய கட்டணங்களை ஒழுங்காக | 1. முகாமைத்துவ பலவீனங்கள் | 2.3 |
| | | 2. பொது மக்களுக்கு சேவைகளை நிறைவேற்றுவதில் தாமதம் | 2.4 |

| | | | |
|---|---|---|---|
| | உறுதிப்படுத்துவதற்கும் அவற்றை முறையாகவும் முழுமையாகவும் உடனடியாக சேகரிப்பதற்கும் கிடைக்கப்பெறும் பணத்தை கணக்கு வைப்பதற்கும் அரசிற்காக பொறுப்புக்களில் கடப்பாடுகளுக்காக அதிகாரமளிப்பதற்கும் நிறைவேற்றப்பட்ட சேவைகள் வழங்குதல் கண்காணிப்பு மற்றும் பரீட்சிப்பதற்கும் அந்த அரசின் நிதியிலிருந்து அற்காக உடனடியாகவும் தாமதமின்றியும் சரியாக கொடுப்பனவு செய்வதற்கும் அதற்கு போதியளவு ஏற்பாடுகள் செய்யப்படுகின்றதெனவும் | | |
| 128(1)(உ) | அரசாங்கத்திற்குச் சொந்தமான அல்லது அரசின் கட்டுக்கோப்பில் காணப்படும் பணம், பொருட்கள் உபகரணங்கள் மற்றும் ஏனைய சொத்துக்களை பாதுகாப்பாக வைத்திருத்தல் மற்றும் பாதுகாப்பதற்காக போதியளவிலும் முறையாகவும் ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளதாகவும் அவை காலத்திற்குக் காலம் சரி பார்க்கப்படுகின்றதெனவும் அவற்றை தீர்வுசெய்யும் போது அவ்வாறு தீர்வுசெய்தல் உரிய ஒழுங்கு விதிகளுக்கும் அறிவுறுத்தல்களுக்கும் இணங்க உள்ளன எனவும் | சொத்துக்கள் முகாமைத்துவத்தில் குறைபாடுகள் | 2.2 |
| 128(1)(ஏ) | நிலுவையாகவுள்ள வருமதிகளை அறவிடுவதற்கு விசேட ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ள தெனவும் அத்தகைய வேலைகள் கையளிக்கப்பட்டுள்ள உத்தியோகத்தர்களால் நிலுவைப் பணத்தை அறவிடுவதனை துரிதப்படுத்துவதற்கு எடுக்கும் நடவடிக்கைகள் தொடர்பாக கீழ்மட்டத்தினரிடமிருந்து மூன்று மாதத்திற்கு ஒருமுறை அல்லது ஏனைய வகையில் ஒழுங்கு படுத்தப்பட்டதன் பிரகாரம் தமக்கு அறிக்கையிடப்படுகின்றதெனவும் | அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கில் நிலுவையான கடன் மீதிகளை அறவிடல் | 2.6 |

## 2. பொருண்மையானதும் முக்கியத்துவமானதுமான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 2.1 திட்டமிடல்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

2014 பெப்ரவரி 17 ஆந் திகதிய 01/2014 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம் 2017 ஆம் ஆண்டிற்காக செயல்நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்பட்டிருந்தது. எவ்வாறாயினும் திணைக்களத்தின் கீழ் ஸ்தாபிக்கப்பட்டுள்ள சட்டரீதியான நிதியமான வக்ப் நிதியத்திலும் சட்டரீதியற்ற நிதியமான ஹஜ் நிதியத்திற்காக செயல்நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.2 சொத்துக்கள் முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

**(அ) எரிபொருள் எரிவு பரீட்சிக்கப்படாமை**

அரசின் வாகன பராமரிப்பு தொடர்பாக 2016 திசெம்பர் 29 ஆந் திகதிய 30/2016 ஆம் இலக்க பொது நிர்வாக சுற்றறிக்கையின் 3.1 ஆம் பந்தியின் பிரகாரம் ஒவ்வொரு எரிபொருள் பரிசோதனையின் பின்னர் 12 மாத காலஎல்லையின் பின்னர் அல்லது 25,000 கிலோமீற்றர் தூரம் ஓட்டத்தில் ஈடுபடுத்தப்பட்டதன் பின்னர் அல்லது என்ஜின் தொடர்பாக பிரதான திருத்தங்களின் பின்னர் போன்ற காரணங்களுக்கு இடையே முதலில் வரும் சந்தர்ப்பத்திற்கு பின்னர் மீண்டும் எரிபொருள் பரிசோதனை மேற்கொள்ளப்பட வேண்டிய போதிலும், திணைக்களத்திற்குச் சொந்தமான வாகனங்களுக்காக அதன் பிரகாரம் எரிபொருள் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

**(ஆ) கையேற்கப்படாத சொத்துக்கள் முறையற்ற விதத்தில் பயன்படுத்துதல்**

புகையிரத திணைக்களத்திற்குரிய காணியொன்றில் திணைக்களத்தினால் திறைசேரி நிதி ஏற்பாடுகளைப் பயன்படுத்தி திணைக்கள கட்டிடம் நிர்மாணிக்கப்பட்டிருந்தது. அக்காணியை திணைக்களத்தின் பெயருக்கு கையேற்கப்பட்டு நிலையான சொத்துப் பதிவேட்டின் கீழ் பதிவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.3 முகாமைத்துவ பலவீனங்கள்

**நிதியத்தை பேணிச் செல்லல்**

**(அ) முஸ்லிம் தர்ம நிதியம்**

(i) பதிவு செய்யப்பட்ட முஸ்லிம் பள்ளிவாயலொன்று தர்ம வருடாந்த தேறிய வருமானத்தில் 6 சதவீத அளவொன்றும் முஸ்லிம் --- --- 10 சதவீதம் முஸ்லிம் தர்ம நிதியத்திற்காக வழங்கப்பட வேண்டுமென வக்ப் சட்டத்தின் 4 ஆம் அத்தியாயத்தின் 43(2) பிரிவின் கீழ் குறிப்பிடப்பட்டுள்ளது. எனினும் பள்ளிவாயல் மற்றும் சமய நிறுவனங்களிடமிருந்து கிடைக்க வேண்டியிருந்த பணம் முஸ்லிம் தர்ம நிதியத்திற்கு கிடைத்ததா என்பன பரீட்சிக்க பொருத்தமான நடைமுறையொன்று திணைக்களத்திடம் காணப்படவில்லை.

(ii) 2017 ஆம் ஆண்டில் முஸ்லிம் தரும நிதியத்திற்காக ரூபா 3,081,771 கிடைக்கப்பெற்றிருந்த போதிலும், சட்டத்தில் குறிப்பிடப்பட்டிருந்த நோக்கங்களை நிறைவேற்றுவதற்கு உரிய செலவினமொன்று மீளாய்வாண்டில் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(iii) 2006 திசெம்பர் 22 ஆந் திகதிய PF/423 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் 4.1 ஆம் பந்தியின் பிரகாரம் சட்ட ரீதியான மற்றும் பொறுப்பு நிதியத்திற்காக நிதியத்தின் நோக்கங்களுக்கு இணங்க வருடாந்த பாதீடு தயாரிக்கப்பட்டு அதன் பிரகாரம் செலவிடப்பட வேண்டிய போதிலும் திணைக்களத்தினால் அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**(ஆ) ஹஜ் நிதியம்**

(i) 2006 திசெம்பர் 22 ஆந் திகதிய PF/423 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் 3.3 ஆம் பந்தியின் பிரகாரம சட்டரீதியற்ற நிதியங்களை மூடிவிடுவதற்கு அல்லது தொடர்ந்தும் பேணிச் செல்வதற்கு நியாயமான காரணங்கள் இருந்தால் அவ்வாறான நிதியத்தை பாராளுமன்ற சட்டமொன்றின் மூலம் சட்டரீதியாக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டிய போதிலும் இந்நிதியத்திற்காக இதுவரை சட்டரீதியான அடிப்படையொன்று காணப்படவில்லை.

(ii) மேற்படி (i) இன் குறிப்பிடப்பட்ட சுற்றறிக்கையின் 4.2 (ஊ) இன் பிரகாரம் சரியான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை பராமரித்து திருப்திகரமான கணக்கீட்டு முறைமையொன்றை பேணிச் செல்லப்பட வேண்டுமென குறிப்பிடப்பட்டுள்ளது. அதன் பிரகாரம் ஹஜ் நிதியத்திற்காக பேணப்பட்ட பேரேட்டுக் கணக்குகள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படவில்லை.

**(இ) நிதியங்களின் வருடாந்த செயலாற்றல் அறிக்கை மற்றும் நிதிக்கூற்றுக்கள்**

2006 திசெம்பர் 22 ஆந் திகதிய PF/423 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் 4.3ஆம் பந்தியின் பிரகாரம் கணக்காண்டு முடிவடைந்து 2 மாதத்திற்குள் அந்தந்த நிதியங்கள் தொடர்பாக வருடாந்த கணக்கு கூற்றுக்கள் மற்றும் செயலாற்றல் அறிக்கையொன்று அரச நிதிப்பணிப்பாளர் நாயகத்திற்கு பிரதியொன்றுடன் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் திணைக்களத்தினால் வக்ப் நிதியம் மற்றும் ஹஜ் நிதியம் என்பவற்றிற்காக அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**2.4 பொது மக்களுக்கு சேவைகளை நிறைவேற்றுதல்**

2008 பெப்ரவரி 06 ஆந் திகதிய 05/2008 ஆம் இலக்க பொது நிர்வாக மற்றும் உள்நாட்டு அலுவல்கள் அமைச்சின் சுற்றறிக்கையின் பிரகாரம் சகல அரச நிறுவனங்களாலும் பொது மக்கள் பட்டயத்தை தயாரித்தல் மற்றும் செயற்படுத்தப்பட வேண்டியுள்ளது எனினும், திணைக்களத்தினால் பொது மக்கள் பட்டயத்தை தயாரித்து செயற்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**2.5 செயற்பாடுகளை நிறைவேற்றுவதற்காக பாராளுமன்றத்தினால் மேற்கொள்ளப்பட்டிருந்த நிதிஏற்பாடுகளை பயன்படுத்துதல்.**

2017 திசெம்பர் 31 ஆந் திகதி முடிவடைந்த 04 ஆண்டு காலப்பகுதியில் திணைக்களத்திற்கு மேற்கொள்ளப்பட்டிருந்த நிதி ஏற்பாடு பயன்பாடு மற்றும் சேமிப்புக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| ஆண்டு | செலவின வகை | தேறிய நிதி ஏற்பாடு | பயன்பாடு | சேமிப்பு | தேறிய நிதி ஏற்பாட்டின் சதவீதமாக சேமிப்பு |
|---|---|---|---|---|---|
| | | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | |
| 2013 | மீண்டெழுபவை | 58.620 | 55.949 | 2.671 | 4.55 |
| | மூலதனம் | 122.300 | 120.335 | 1.965 | 1.61 |
| | மொத்தம் | **180.920** | **176.284** | **4.636** | **2.56** |
| 2014 | மீண்டெழுபவை | 60.640 | 55.351 | 5.289 | 8.72 |
| | மூலதனம் | 31.050 | 22.405 | 8.645 | 27.84 |
| | மொத்தம் | **91.690** | **77.756** | **13.934** | **15.19** |
| 2015 | மீண்டெழுபவை | 82.304 | 81.845 | 0.459 | 0.55 |
| | மூலதனம் | 76.251 | 75.341 | 0.910 | 1.19 |
| | மொத்தம் | **158.555** | **157.186** | **1.369** | **0.86** |
| 2016 | மீண்டெழுபவை | 106.717 | 97.124 | 9.593 | 8.98 |
| | மூலதனம் | 31.880 | 30.350 | 1.530 | 4.80 |
| | மொத்தம் | **138.597** | **127.474** | **11.123** | **8.02** |
| 2017 | மீண்டெழுபவை | 109.085 | 93.919 | 15.165 | 13.90 |
| | மூலதனம் | 37.200 | 33.617 | 3.582 | 9.63 |
| | மொத்தம் | **146.285** | **127.536** | **18.748** | **12.81** |

இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

**ஒதுக்கீடு செய்யப்பட்ட நிதிஏற்பாடுகள் பயன்படுத்தப்படாமை**

மீளாய்வாண்டில் செலவின விடயமொன்றுக்கான ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்த ரூபா 150,000 ஆன பெறுமதி நிதிஏற்பாடுகள் பயன்படுத்தப்படாமல் சேமிக்கப்பட்டிருந்தன.

**(அ) மிகை நிதிஏற்பாடு மேற்கொள்ளல்**

மீளாய்வாண்டின் போது 03 செலவின விடயங்களுக்காக ரூபா 16,311 மில்லியன் மிகை ஏற்பாடு செய்யப்பட்டமையால் அந்த செலவின விடயங்களுக்குரிய நிதி ஏற்பாடுகளிலிருந்து ரூபா 24,038 மாத்திரம் பயன்படுத்தப்பட்டமையால் சேமிப்புக்கள்

மேற்கொள்ளப்பட்டிருந்த நிதிஏற்பாட்டில் 13 சதவீதம் முதல் 95 சதவீதம் வரையான அளவனைக் கொண்டிருந்தது.

## 2.6 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு

**பாராளுமன்றத்தினால் விதிக்கப்பட்டிருந்த எல்லைகள்**

அமைச்சிற்குரிய 20201 ஆம் விடய இலக்கத்தின் கீழ் அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு தொடர்பாக பாராளுமன்றத்தினால் விதிக்கப்பட்ட எல்லைகள் மற்றும் உள்ளபடியான பெறுமதிகள் கீழே காண்பிக்கப்பட்டுள்ளன.

| செலவினம் | | பெறுவனவுகள் | | வரவு மீதி | |
|---|---|---|---|---|---|
| ஆகக் கூடிய எல்லை | உள்ளவாறானது | ஆகக் குறைந்த எல்லை | உள்ளவாறானது | ஆகக் கூடிய எல்லை | உள்ளவாறானது |
| ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் |
| 4.50 | 3.66 | 1.25 | 1.89 | 12.00 | 8.45 |

இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

### (அ) நிலுவையான கடன் மீதிகளை அறவிடாமை

கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட இணக்கக் கூற்றின் பிரகாரம் அத்திகதியில் உள்ளவாறு அறவீடுகள் நிலுவையாக இருந்த மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 215,752 ஆக இருந்ததுடன் அந்நிலுவைக் கடன் மீதிகள் 21 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலமாக இருந்து வருவதுடன் அதனை அறவிடுவதன் பின்தொடர் நடவடிக்கை பலவீனமான நிலைமஒன்றில் காணப்பட்டது.

### (ஆ) மீளாய்வாண்டில் கடன் மீதிகளை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படாமை

2016 திசெம்பர் 28 ஆந் திகதிய 31/2016 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் ஏற்பாடுகளின் பிரகாரம் 2017 ஆம் ஆண்டின் விசேட முற்பணம் 2017 சனவரி 01 முதல் 2017 பெப்ரவரி 28 ஆந் திகதி வரை மாத்திரமாக இருந்ததுடன் அம்முற்பணம் 2017 ஆம் ஆண்டில் தீர்வு செய்யப்படல் வேண்டும். எனினும் கணக்குகளிலிருந்து விடுபட்டமையால் உருவான ரூபா 4,000 தீர்க்கப்படாத முற்பண மீதியொன்றாக 2017 திசெம்பர் 31 இல் அவதானிக்கப்பட்டது.

## 2.7 மனிதவள முகாமைத்துவம்

**அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் உள்ளபடியான பதவியணியினர் மற்றும் ஆளணி வேதனங்களுக்கான செலவினம்**

2017 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியான அங்கீகரிக்கப்பட்ட, உள்ளபடியான, வெற்றிடமான மற்றும் மிகைப் பதவியணி தொடர்பான விபரங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன. மீளாய்வாண்டிற்காக அமைச்சினால் ஆளணி வேதன செலவின தொகுதிக்காக ரூபா 44.585 மில்லியன் செலவிடப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் ஒரு நபருக்கான செலவினம் ரூபா 500,955 ஆக இருந்தது.

| | ஊழியர் வகை | அங்கீகரிக்கப்பட்ட எண்ணிக்கை | உள்ளபடியான எண்ணிக்கை | வெற்றிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| (i) | சிரேஷ்ட நிலை | 09 | 03 | 06 |
| (ii) | மூன்றாம் நிலை | 02 | - | 02 |
| (iii) | இரண்டாம் நிலை | 95 | 72 | 23 |
| (iv) | ஆரம்ப நிலை | 17 | 14 | 03 |
| | மொத்தம் | 123 | 89 | 34 |

இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

திணைக்களத்தில் 34 வெற்றிடங்கள் காணப்பட்ட போதிலும் வெற்றிடங்களை நிரப்புவதற்கோ அல்லது தேவையின் பிரகாரம் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரை திருத்தம் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.